විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வூ/சுற்றுநிருபம்/2012 දිනය / திகதி / Date -01-2012

**ஓய்வூதியச் சுற்றுநிருபம்: 01/2012**

அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/பிரதேச செயலாளர்களுக்கு,

**உள்ளூராட்சி ஓய்வூதிய மாதாந்தக் கொடுப்பனவு ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கோவைகளின் பொறுப்பினை பிரதேச செயலகங்களிடத்தே பண்முகப்படுத்தல்**

என்னால் வெளியிடப்பட்ட 13-12-2010 திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 12/2010 மற்றும் 07-07-2011 திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 12/2010 (I) என்பனவற்றினை இரத்துச் செய்யும் வண்ணம் இச்சுற்றுநிருபத்தினை வெளியிடுகின்றேன்.

**01. பின்னனி**

உள்ளூராட்சி ஓய்வூதியம் மற்றும் மற்றும் உள்ளூராட்சிச் சேவை விதவைகள் அனாதைகள்/தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம், 1974 இலக்கம் 16 கொண்ட உள்ளூராட்சிச் சேவைச் சட்டம் மற்றும் அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. மாகாண சபைகள் நிறுவப்பட்டதன் பின்னர் மாகாண அரச சேவை உருவாக்கப்பட்டதுடன் உள்ளூராட்சிச் சேவை ஊழியர்கள் மாகாண அரச சேவையினுள் உள்வாங்கப்பட்டனர். 1993 இலக்கம் 17 கொண்ட மாகாண சபை ஓய்வூதியச் சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட முன்னர், அதாவது 03-09-1993 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற உள்ளூராட்சிச் சேவை அதிகாரிகளுக்காக உள்ளூராட்சி ஓய்வூதியத் திட்டம் தொடர்ந்தும் செயற்படுகின்றது. உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளரின் கீழ் செயற்படுத்தப்பட்ட உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியத் திட்டம் 01-01-1990 ஆந் திகதி முதல் ஓய்வூதியத் திணைக்களத்திடத்தே கையளிக்கப்பட்டது. மேற்குறித்த ஓய்வூதியத் திட்டத்தின் தற்போதைய ஆணை பெற்ற அதிகாரி ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகமாவார்.

உள்ளூராட்சி ஓய்வூதியக் கோவைகள், இத்திணைக்களத்தின் உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியப் பிரிவினால் பராமரிக்கப்பட்டதுடன் ஓய்வூதியச் சுற்றுநிருபம் 7/98 இன் படி மாதாந்த ஓய்வூதிய வழங்கல் நடவடிக்கைகள் 01-01-1999 ஆந் திகதி முதல் பிரதேச செயலகங்களிடத்தே பண்முகப்படுத்தப்பட்டதுடன், கொடுப்பனவுகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடு இவ் அலுவலகத்தினூடாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

அரச ஓய்வூதியம் வங்கித் தொகுதியினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் கீழ் மார்ச் 2006 மற்றும் ஏப்பிரல் 2007 (வடக்கு/கிழக்கு) முதல் கொடுப்பனவுச் செயற்பாடு தொடர்ந்தும் பண்முகப்படுத்தப்பட்டதுடன், மாதாந்த ஓய்வூதிய வழங்கல்களிற்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டினை இடை நிறுத்திப் பிரதேச செயலகங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் நிதி ஏற்பாட்டினை உபயோகித்துக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும், அச் செலவீனங்களை குறித்த செலவுத் தலைப்பிற்கு வரவு வைப்பதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் கீழ் மாதாந்த மாறுதல்கள் மற்றும் பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்படும் உயிரிழப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சம்பள ஏடுகளைத் தயாரித்தல் இத்திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டது.

## 02. பண்முகப்படுத்தற் செயற்பாடு

மாகாண அரச சேவை நிறுவப்பட்டதன் பின்னர் அவ்வப்போது உள்ளூராட்சி மாதாந்த ஓய்வூதிய வழங்கற் செயற்பாடு பண்முகப்படுத்தப்பட்டதுடன், இத்திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட சம்பள ஏடுகளைத் தயாரித்தல் மற்றும் கோவைகளின் பொறுப்பு 01-01-2011 ஆம் திகதி முதல் சம்பூரணமாகப் பிரதேச செயலகங்களிடத்தே பண்முகப்படுத்தப்பட்டது. அதன் படி 31-12-2011 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவைக் கலைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்குக் கீழ்வரும் அறிவுறுத்தல்களை வழங்குகின்றேன்.

I. குறித்த மாதத்தின் உள்ளூராட்சிச் சேவை சிவில் ஓய்வூதியர்களின் உயிரிழப்புக்கள் இருப்பின் அடுத்த மாதத்தின் 05ஆந் திகதிக்கு முன்னர் அத்தகவல்களை மாவட்டச் செயலாளரிடத்தே பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

II. மாவட்டச் செயலாளர்களினால் தமது மாவட்டத்தினுல் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுடனும் தொடர்புறும் மாதாந்த உயிரிழப்புக்கள் பற்றிய அறிக்கையொன்றினைத் தயாரித்து அடுத்த மாதத்தின் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திடத்தே அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

III. உள்ளூராட்சிச் சேவை சிவில் ஓய்வூதியரொருவர் உயிரிழக்கையில் தங்களால் குறித்த விதவைகள்/தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கோவையினை இத்திணைக்களத்திடமிருந்து விண்ணப்பித்தல் வேண்டும். (உள்ளூராட்சி ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டினைப் பண்முகப்படுத்தலின் கீழ் சிவில் ஓய்வூதியக் கோவைகள் தங்களிடத்தே அனுப்பப்பட்டுள்ளதுடன், ஏதேனுமோர் வகையில் சிவில் ஓய்வூதியக் கோவை அனுப்பப்பட்டிராவிடில், அவ் ஓய்வூதியக் கோவையினையும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியக் கோவை சகிதம் விண்ணப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.) விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய இலக்கத்தினைப் பெற்றுக்கொடுத்தலை இலகுபடுத்துவதற்காக தங்கள் வசமுள்ள சிவில் கோவையினை எம்மிடத்தே அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

IV. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி ஓய்வூதியக் கோவை, சிவில்/ விதவைகள்/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கோவையாக உருமாற்றப்பட்டு, என்னால் தங்களிடத்தே அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதன் அடிப்படையில் தங்களினால் குறித்த கொடைப்பத்திரத்தினை வழங்கிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

V. விதவைகள் அனாதைகள் ஓய்வூதியக் கொடை இலக்கங்களை வழங்குகையில் சிவில் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியக் கொடை இலக்கங்களை வழங்கும் முறைமைகளையே பின்பற்றுதல் வேண்டும்.

**உதாரணம்: 30-03-1988 ஆம் திகதி ஓய்வு பெற்ற திரு. ஏ.கே. சிரிசேனா, 11-11-2010 ஆம் திகதி உயிரிழந்ததுடன், அவரின் ஓய்வூதிய இலக்கம் 12100 ஆகும். கொடை வழங்கப்படுவது பியகம பிரதேச செயலகத்தினாலாகும்.**

| | |
|---|---|
| 1988 ஆம் ஆண்டுடன் தொடர்புறும் இலட்சத் தொகுதி | 500,000 |
| 1988 ஆம் ஆண்டுடன் தொடர்புறும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியங்களிற்காக | 400,000 |

பியகம பிரதேச செயலகத்தினால் இறுதியாக வழங்கப்பட்டுள்ள நான்கு இலட்சத் தொகுதியின் இலக்கம் 410004 ஆகும்.

| மாவட்ட இலக்கம் | பி.செ. இலக்கம் | குறியீட்டு இலக்கம் | கொடை இலக்கம் |
|---|---|---|---|
| 07 | 01 | 21 | 410005 |

VI. சிவில் ஓய்வூதியமொன்றுடன் தொடர்புறும் வண்ணம் பத்தாண்டுத் திருத்தத்திற்கான விண்ணப்பமொன்று கிடைக்கையில், தங்களால் பத்தாண்டுத் திருத்தத்தினைச் செய்து கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும், 03-09-1993 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ள ஓய்வூதியர்களின் ஓய்வூதியத் திருத்தமொன்றிற்கான வேண்டுகோள் கிடைக்கையில் அவ்விண்ணப்பம் மற்றும் ஓய்வூதியக் கோவையினை ஓய்வூதியத் திணைக்களத்திடத்தே அனுப்பவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். திருத்தப்பட்ட ஓய்வூதியங்களை வழங்குகையில் உள்ளூராட்சி ஓய்வூதியத்தினை வழக்கொழித்து சிவில் ஓய்வூதிய இலக்கத்தின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளப் பிரதேச செயலாளர் கருத்தாயிருத்தல் வேண்டும்.

VII. உள்ளூராட்சிச் சேவை சிவில்/விதவைகள் அனாதைகள்/தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியர்களுக்கான அடையாள அட்டைகளைத் தயாரித்தலும் பிரதேச செயலாளரினாலேயே நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான புதிய கொடைகள், மீள்திருத்தக் கொடைகள் என்பன சிவில் ஓய்வூதிய இலக்கங்களின் கீழ் ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படுவதுடன், விதவைகள், தபுதாரர், அனாதைகள் மற்றும் வலது குறைந்தோருக்கான கொடைப்பத்திரங்களை வழங்கலானது, பிரதேச செயலகங்களின் மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கே.ஏ. திலகரத்ன,

ஓய்வூதியப் பணிப்பளர் நாயகம்.

பிரதிகள்
01. சனாதிபதி செயலாளர்.
02. பிரதமரின் செயலாளர்.
03. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
04. கணக்காய்வாளர் நாயகம்.